OL/2010/62-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

| | | |
|---|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය හා ප්‍රජා පාලනය | I, II | පැය තුනයි |
| குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் | I, II | மூன்று மணித்தியாலம் |
| Citizenship Education & Governance/Civic & Governance | I, II | Three hours |

சுட்டெண் :..............................

## (62) குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I

* இவ்வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டுள்ளது.
* ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடை எழுதுக.

---

- இலக்கம் **1** இலிருந்து **8** வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

1. சனநாயக சமூகமொன்றில்
   (1) நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறும்.
   (2) ஆட்சி செயன்முறை அரசியலமைப்பிற்கேற்ப நடைபெறாது.
   (3) போட்டித் தன்மை வாய்ந்த கட்சிமுறையைக் காணவியலாது.
   (4) சட்டத்தின் ஆட்சி நிலவமாட்டாது. (.........)

2. அரசாங்கமானது
   (1) மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்.
   (2) அரசின் ஓர் அங்கமாகும்.
   (3) நிலையானதோர் நிறுவனமாகும்.
   (4) பல்வேறு இயல்புகளைக் கொண்டிராது. (.........)

3. சனாதிபதி ஆட்சிமுறையின் முக்கிய இயல்பாவது
   (1) சனாதிபதி சட்டத்துறையினால் தேர்ந்தெடுக்கப்படுதல்
   (2) சட்டத்துறையில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றின் மூலம் சனாதிபயைப் பதவியிலிருந்து நீக்க முடியும்.
   (3) சனாதிபதி பெயரளவு நிறைவேற்று நிருவாகியாவார்.
   (4) உரிய பதவிக் காலத்தின்போது சனாதிபதியை அப்பதவியிலிருந்து நீக்க முடியும். (.........)

4. நவீன தேசிய அரசுகளின் பிரதான இயல்பாவது
   (1) ஒரு தேசிய இனத்திற்கு ஓர் அரசு எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் அமைந்தது.
   (2) தொழில்சார் அதிகாரங்கள் பணிக்குழுவின் மூலம் நிருவகிக்கப்படமாட்டாது.
   (3) மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சிமுறையொன்று நிலவமாட்டாது.
   (4) உள்வாரி மற்றும் வெளிவாரி இறைமை அதிகாரம் நிலவமாட்டாது. (.........)

[பக். 2 ஐப் பார்க்க

21893

இங்கே வெட்டி அகற்றவும்

● பின்வருவன அரசாங்கத்தின் பணிகளாகும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு **5** ஆம் **6** ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – நிதிக்கட்டுப்பாடு
B – அரச சேவையைக் கட்டுப்படுத்தல்
C – சட்டத்திற்கு விளக்கமளித்தல்
D – வெளியுறவைக் கட்டுப்படுத்தல்
E – பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்
F – சட்டத்தை அமுல்படுத்தல்
G – ஆணைகளையும் கட்டளைகளையும் பிறப்பித்தல்

5. நிறைவேற்றுத்துறைக்கு மாத்திரம் உரித்தான பணிகளைக் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A B C (2) D E F (3) B D G (4) E F G (.........)

6. நீதித் துறைக்கு மாத்திரம் உரித்தான பணிகளைக் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A B C (2) C D E (3) E F G (4) C E F (.........)

● பின்வருவன பாராளுமன்ற மற்றும் சனாதிபதி ஆட்சிமுறைகளின் அடிப்படை இயல்புகள் சிலவாகும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு **7** ஆம் **8** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – நிறைவேற்றுத் துறையானது சட்டத்துறைக்குப் பொறுப்புக்கூறத் தேவையில்லை.
B – நிறைவேற்றுத் துறைக்கும் சட்டத்துறைக்குமிடையே நெருக்கமான தொடர்பு காணப்படும்.
C – நிறைவேற்றதிகாரம் சனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்படும்.
D – பிரதமரும் அமைச்சரவையும் சட்டத்துறையிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.
E – நிறைவேற்றதிகாரம் பிரதமர் மற்றும் அமைச்சரவை மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
F – சனாதிபதியை உரிய பதவிக்காலத்தின்போது குற்றப்பிரேரணை ஒன்றின் மூலம் பதவிநீக்க முடியும்.

7. பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு மாத்திரம் உரித்தான இயல்புகள் அடங்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A B C (2) C D E (3) D E F (4) B D E (.........)

8. சனாதிபதி ஆட்சிமுறைக்கு மாத்திரம் உரித்தான இயல்புகள் அடங்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A B C (2) C D E (3) A C F (4) D E F (.........)

● இலக்கம் **9** இலிருந்து **18** வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் எதிரேயுள்ள **அடைப்புக்குறிக்குள்** அடையாளம் இடுக.

9. சார்க் அமையத்திற்குத் தற்போது தலைமை தாங்குவது இலங்கையாகும். (.........)

10. சட்டத்துறையின் அனுமதியின்றி வரிவிதிக்க முடியும். (.........)

11. அரசொன்றின் அடிப்படைச் சட்டம் அரசியலமைப்பாகும். (.........)

12. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை நடாத்துதல் நல்லாட்சியின் ஒரு பண்பாகும். (.........)

13. சமஷ்டி ஆட்சி முறையொன்றில் மத்திய மற்றும் பிராந்திய அரசுகளிடையே அதிகாரப் பகிர்வு காணப்படமாட்டாது. (.........)

14. மனிதர்களின் உள்வாரி மற்றும் வெளிவாரியான நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசினால் பிறப்பிக்கப்படும் விதிகள் சட்டங்களாகும். (.........)

15. சொத்துகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் சிவில் சட்டத்திற்குட்பட்டவையாகும். (.........)

16. இலங்கையின் அதியுயர் நீதிமன்றம் மேல் நீதிமன்றமாகும். (.........)

17. சகல விதமான சிவில் வழக்குகளும் மாவட்ட நீதிமன்றங்களால் மேற்கொள்ளப்படும். (.........)

18. அரச சேவையாளரின் அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரித்தல் இலங்கையில் ஒம்புட்ஸ்மனின் பொறுப்பாகும். (.........)

[பக். 3 ஐப் பார்க்க

- இலக்கம் **19** இலிருந்து **32** வரை உள்ள ஒவ்வொரு கூற்றின் இறுதியிலும் அடைப்புக் குறியினுள் தரப்பட்டுள்ள வற்றிலிருந்து சரியான சொல்லை/சொற்களைத் தெரிவு செய்து வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

19. இலங்கையில் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆட்சிமுறையானது ........................................ அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
(அமெரிக்க மாதிரியை/ வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியை/ அமெரிக்க, பிரான்ஸ் மற்றும் வெஸ்ட் மினிஸ்டர் மாதிரியை)

20. சட்டத்தின் ஆட்சி என்னும் எண்ணக்கருவில் ........................................ என்பதும் அடங்கும்.
(சட்டத்தைப் பல்வேறு வழிகளில் விளக்குதல்/ சட்டத்தின் முன் யாவரும் சமம்/ சட்டம் இறைவனின் படைப்பு)

21. தேசவழமைச் சட்டமானது ........................................ உரியதாகும்.
(முழுத்தீவிற்கும்/ தாழ்நாட்டு மக்களுக்கு/ யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்கள் கூட்டத்திற்கு)

22. இலங்கையில் அதிகாரப் பகிர்விற்கான முயற்சிகள் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் உள்ளடங்கியுள்ள ........................................ மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
(ஒன்பதாவது திருத்தம்/ பன்னிரண்டாவது திருத்தம்/ பதின்மூன்றாவது திருத்தம்)

23. டொனமூர் அரசியலமைப்பின் கீழ் நிறுப்பட்ட சட்டத்துறையானது ........................................ என்னும் பெயரால் அழைக்கப்பட்டது.
(தேசிய அரசுப் பேரவை/ பாராளுமன்றம்/ அரசுக்கழகம்)

24. சோல்பரி அரசியலமைப்பில் ........................................ உள்ளடக்கப்பட்டுள்ளது.
(அடிப்படை உரிமைகள் எனும் அத்தியாயம்/ சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பான சரத்து/ ஒம்பூட்ஸ்மன் பதவி)

25. இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் ........................................ அறிமுகப்படுத்தப்பட்டது.
(பெயரளவு சனாதிபதிப் பதவி/ அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள்/ பொதுசன அபிப்பிராயம்)

26. சிவில் அல்லது குற்றவியல் வழக்குகளில் அரச தரப்பைப் பிரதிநிதிப்படுத்துபவர் ........................................ ஆவார்.
(பொலிஸ் மா அதிபர்/ இராணுவத் தளபதி/ சட்டமா அதிபர்)

27. நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவராகக் கடமையாற்றுபவர் ........................................ ஆவார்.
(மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்/ பிரதம நீதியரசர்/ சட்டமா அதிபர்)

28. இலங்கையின் மாநகரசபை, நகரசபை மற்றும் ........................................ சமகால உள்ளூராட்சி நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன.
(சிறிய நகரசபைகள்/ கிராமசபைகள்/ பிரதேசசபைகள்)

29. ஐக்கிய நாடுகளின் பெண்கள் உரிமைகள் தொடர்பான சமவாயம் கைச்சாத்திடப்பட்டது .................. ஆம் ஆண்டிலாகும்.
(1948/ 1979/ 1989)

30. மானிட அபிவிருத்திச் சுட்டியில் ஆயுள் எதிர்ப்பார்க்கை, எழுத்தறிவு மற்றும் ........................................ என்பன உள்ளடங்குகின்றன.
(சிசுமரண வீதம்/ குடிநீர் வசதி/ கொள்வனவு சக்தி (தலா வருமானம்))

31. இராஜதந்திர மற்றும் ........................................ சர்வதேச உறவுகள் துறைக்குரியதாகும்.
(வர்த்தக உறவுகள்/ தொழில் நுட்ப உறவுகள்/ யுத்தோபாய உறவுகள்)

32. தற்போது உலகில் நடைமுறையிலுள்ள வலய ரீதியான யுத்த ஒழுங்கமைப்பானது ........................................ ஆகும்.
(வோர்சோ/ நேட்டோ/ ஆசியான்)

[பக். 4 ஐப் பார்க்க

இங்கே வெட்டி அகற்றவும்

● இலக்கம் **33** இலிருந்து **40** வரையிலான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கூற்றுகளில் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

33. சட்டம்
   (1) இறைமை அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அரசினால் பிறப்பிக்கப்படும்.
   (2) சமூகத்தின் பொது நன்மையைக் கருத்திற் கொண்டு பிறப்பிக்கப்படும்.
   (3) மாறிவரும் சமூகத் தேவைகளுக்கேற்ப மாற்றமுறும்.
   (4) நபர்களின் உள்வாரி மற்றும் வெளிவாரியான நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிறப்பிக்கப்படும். (.........)

34. அரசியலமைப்பானது
   (1) நாடொன்றின் அடிப்படைச் சட்டமாகும்.
   (2) அனைத்து சட்டங்களும் அரசியலமைப்பின் வரம்பிற்கு உட்பட்ட வகையில் உருவாகும்.
   (3) தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ளது 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பாகும்.
   (4) இலங்கையின் அரசியலமைப்பானது சாதாரண பெரும்பான்மையின் மூலம் திருத்தப்படும். (.........)

35. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம்
   (1) இலங்கை குடியரசானது.
   (2) ஓரங்க சட்டத்துறை நிறுவப்பட்டது.
   (3) ஆளுநர் பதவி ஒழிக்கப்பட்டு பெயரளவு சனாபதி பதவி ஏற்படுத்தப்பட்டது.
   (4) விகிதசமப் பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப்பட்டது. (.........)

36. சூழலின் பௌதிகக் கூறாகக் கொள்ளப்படுவது
   (1) மண் (2) நீர் (3) விலங்குகள் (4) காற்று (.........)

37. அபிவிருத்திச் செயன்முறையை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் நவீன அளவை முறையானது
   (1) பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் (2) மானிட அபிவிருத்திச் சுட்டி
   (3) சராசரி தேசிய உற்பத்தி (4) மானிட வறுமைச் சுட்டி (.........)

38. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையானது
   (1) நிரந்தர உறுப்பினர்கள் ஐந்து பேரையும் தற்காலிக உறுப்பினர்கள் ஏழு பேரையும் கொண்டது.
   (2) தற்காலிக உறுப்பினர்கள் பொதுச்சபையினால் இரண்டு ஆண்டுகள் கொண்ட பதவிக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.
   (3) சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணும் அடிப்படைப் பொறுப்புடையது.
   (4) தீர்மானமெடுத்தலில் வல்லரசுகளின் இரத்து அதிகாரத்திற்குட்பட்டது. (.........)

39. சார்க் அமையத்திற்குரிய நாடுகளாவன
   (1) இலங்கை (2) இந்தியா
   (3) பாகிஸ்தான் (4) இந்தோனேசியா (.........)

40. வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்பான சர்வதேச ஒழுங்கமைப்பானது
   (1) ஐரோப்பிய பொது வர்த்தகக் கூட்டு (2) உங்டாட் அமையம்
   (3) உலக வர்த்தக அமையம் (4) ஒபேக் தாபனம் (.........)

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

පුරවැසි අධ්‍යාපනය හා ප්‍රජා පාලනය I, II
குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I, II
Citizenship Education & Governance/Civic & Governance I, II

## (62) குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் II

※ **முதலாம்** வினா கட்டாயமானது.
※ **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. (i) கிரேக்க நேரடி சனநாயக முறையின் பண்புகள் **இரண்டை** எழுதுக.
   (ii) தேசிய அரசின் பிரதான பண்புகள் **இரண்டை** எழுதுக.
   (iii) ஒற்றையாட்சி அரசின் அடிப்படை இயல்புகள் **இரண்டை** எழுதுக.
   (iv) பல்கலாசார சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் **இரண்டை** எழுதுக.
   (v) முதலாளித்துவப் பொருளாதார முறைமையின் அடிப்படைப் பண்புகள் **இரண்டை** எழுதுக.
   (vi) முரண்பாட்டுத் தீர்வில் கைக்கொள்ளப்படும் வழிமுறைகள் **இரண்டை** எழுதுக.
   (vii) இலங்கை மேல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் **இரண்டை** எழுதுக.
   (viii) இலங்கையின் மாநகர சபைகளுக்குரிய அதிகாரங்கள் **இரண்டை** எழுதுக.
   (ix) அரசியல் உரிமைகள் **இரண்டை** எழுதுக.
   (x) ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் அதிகாரங்கள் **இரண்டை** எழுதுக.
   (02 × 10 = 20 புள்ளிகள்)

2. பன்முகப்படுத்தும் செயன்முறையானது நவீன அரசுகளில் அவதானிக்கக்கூடிய பொதுப்போக்காகும்.
   (i) பன்முகப்படுத்தல் எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)
   (ii) இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள மாகாண சபைகள் நிறுவப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த கட்டளைச் சட்டங்கள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)
   (iii) இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் பிரச்சினைகளில் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாகக் கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

3. முரண்பாடானது எந்தவொரு சமூகத்திற்கும் விதிவிலக்கானதன்று.
   (i) முரண்பாடு ஏற்படுவதற்கான காரணிகள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)
   (ii) முரண்பாட்டுத் தீர்வுக்கான வழிமுறைகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)
   (iii) முரண்பாட்டுத் தீர்வின்போது நடுநிலையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய குணவியல்புகளில் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

4. அரசியலமைப்புவாதமானது நவீன சனநாயகத்தின் பிரதான அம்சமாகும்.
   (i) இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் சனாதிபதிக்குரிய நிறைவேற்றதிகாரங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் நீதித்துறைச் சுதந்திரத்தைப் பேணுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)
   (iii) மனித உரிமைகளின் வகைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

5. நாடொன்றின் அபிவிருத்தியில் பொருளாதாரத்தைச் சரியாக முகாமை செய்தல் அத்தியாவசியமானதாகும்.
   (i) சந்தைப் பொருளாதாரத்தின் பண்புகள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)
   (ii) சமவுடைப் பொருளாதாரத்தின் பண்புகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)
   (iii) இலங்கையின் சமகாலப் பொருளாதாரப் பிரச்சினைகளில் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாகக் கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

6. சூழலைப் பேணாவிடின் புவியில் மானிட நிலவுகை சாத்தியமற்றதாகிவிடும்.
   (i) சூழல் தொடர்பான பிரசைகளின் பொறுப்புகள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)
   (ii) இலங்கையில் சூழல் பாதுகாப்புடன் தொடர்பான நிறுவனங்கள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)
   (iii) சூழல் பிரச்சினைகளைக் குறைப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளில் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாகக் கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

7. சர்வதேச உறவுகள் துறையில் சர்வதேச தாபனங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.
   (i) சர்வதேச தாபனங்கள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)
   (ii) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பிரதான நிறுவனங்கள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)
   (iii) ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் உலக சமாதானத்திற்காக ஆற்றப்பட்ட சேவைகளில் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

* * *

The National e-learning Portal for The General Education

09563

OL/2010/63-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2010**

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
**Entrepreneurship Studies I, II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## முயற்சியாண்மைக் கற்கை I

கவனிக்க :

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

---

1. முயற்சியாண்மை என்ற எண்ணக்கருவுக்கு நான்கு மாணவர்களால் தரப்பட்ட நான்கு வரைவிலக்கணங்கள் கீழே தரப்படுகின்றது. மிகவும் பொருத்தமான வரைவிலக்கணத்தைத் தெரிவு செய்க.
   (1) ஒரு நீண்டகால தெளிவான இலக்குடன் வணிகத்தைச் செய்தல்
   (2) ஒரு புதிய தூரநோக்குடன் இருக்கும் பயனுள்ள பிரஜைகளுடன் வேலை செய்தல்
   (3) உற்பத்திக் காரணிகளை உத்தமமான மட்டத்தில் முகாமை செய்தல்
   (4) புதிய முறைகளை உருவாக்குவதன் மூலம் புதிய பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்

2. முயற்சியாண்மையின் மூலம் பிரதேசத்துக்கு ஓர் அனுகூலமாக உட்கட்டமைப்பு அபிவிருத்திகளைப் பார்க்க முடியும். 'உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்' என்பதனால் கருதப்படுவது யாது ?
   (1) பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் விருத்தியடைதல்
   (2) சுகாதாரம், பாதுகாப்பு போன்ற நல வசதிகள் விருத்தியடைதல்
   (3) பாதைகள் (வீதிகள்), மின்சாரம், நீர்ச் சேவைகள் போன்ற வசதிகள் விருத்தியடைதல்
   (4) தொழிற்பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்

3. உணவு தயாரிக்கும் நிறுவனம் ஒன்றினால் தரப்பட்ட கூற்று பின்வருமாறு:
   "உலகத்தின் பட்டினியை இல்லாதொழித்தல்" நிறுவனத்தின் இக்கூற்றானது
   (1) தூரநோக்கு (vision)
   (2) இலட்சிய நோக்கு (mission)
   (3) இலக்கு (goal)
   (4) குறிக்கோள் (objective)

4. முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பில் நபர்கள் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்கின்றனர். மனப்பாங்கு (mind-set) என்பதனையும் இதில் ஒரு சவாலாகக் கருதிக்கொள்ள முடியும். இங்கு 'மனப்பாங்கு' என்பதன் மூலம் கருதப்படுவது
   (1) சட்ட ரீதியான தடைகள்
   (2) முயற்சியாண்மையாளரின் வகிபாகங்கள் தொடர்பிலான குறைபாடு
   (3) குடும்பப் பின்னணி ஒன்று இல்லாமை
   (4) ஒரு குறிப்பிட்ட வரைபுக்குள் நபரின் புத்திசாலித்தனம் வரையறுக்கப்பட்டிருத்தல்

5. சமூக முயற்சியாண்மையாளர்கள் உருவாவதற்கு பிரதான காரணம்
   (1) சமூகத்தில் நோய்கள் பரவுதல்
   (2) ஒரு போர்ச் சூழல் தற்போது காணப்படுதல்
   (3) தரும சிந்தனை காணப்படுதல்
   (4) சூழல் மாசடைதல்

[பக். 2 ஐப் பார்க்க

6. ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது கருத்திற் கொள்ளத்தக்க அளவுடைய இலங்கைப் பெண்கள் கூடுதலான கல்வியறிவுடையவர்கள் என அறிக்கைகள் கூறுகின்றன. இருந்தபோதும், இலங்கைப் பெண்கள் முயற்சியாண்மை நடவடிக்கையில் கூடுதலாக அக்கறை செலுத்தவில்லை எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலைமைக்கான பிரதான காரணமாக அமைவது
   (1) பெண்கள் இடர்களை ஏற்க விரும்பாமை
   (2) பெண்களின் தொழினுட்ப அறிவு போதாமை
   (3) பெண்களின் சமூக உறவு ஒரு கீழ் மட்டத்தில் காணப்படுகின்றமை
   (4) பெண்கள் வியாபாரத் தீர்மானங்களை எடுக்க விரும்பாமை

7. வணிகங்களை நுண்ணிய (micro), சிறிய, நடுத்தர மற்றும் பாரிய என வகைப்படுத்த முடியும். இவ்வகைப்படுத்துக்கான அடிப்படை
   (1) உடைமை (2) குறிக்கோள் (3) நிறுவனவகை (4) அளவு

8. சிற்றளவு வணிகங்களின் ஒரு பிரதான சிறப்பியல்பு
   (1) சிறிய அளவிலான வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்
   (2) சந்தையில் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்த முடியாதிருத்தல்
   (3) உடைமையாளர்களுக்கு ஒரு பெரிய அளவிலான இலாபத்தை பெற்றுக் கொடுக்க முடியாதிருத்தல்
   (4) போதிய அளவான உட்கட்டமைப்பு வசதிகளை பெறமுடியாதிருத்தல்

9. மிகவும் வெற்றிகரமான ஒரு முயற்சியாண்மையாளர் உருவாவதில் தாக்கம் செலுத்தும் காரணிகளை **மட்டும்** உள்ளடக்கியுள்ள தொகுதி எதுவெனத் தெரிவு செய்க.
   (1) புத்திக்கூர்மை, செல்வம், உறவுமுறை
   (2) கல்வி, அனுபவம், சார்பான மனப்பாங்குகள்
   (3) செல்வம், உறவுமுறை, சார்பான மனப்பாங்குகள்
   (4) திறன்கள், உறவுமுறை, புத்திக்கூர்மை,

10. வணிகத்தின் மீது அக்கறையுடைய தரப்பினருள் முதலீட்டாளர்கள் முக்கியமானவர்கள். முதலீட்டாளர்கள் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான ஒரு காரணி
   (1) சூழல் பாதுகாப்பு
   (2) சம்பளங்களும் வேலைவாய்ப்புச் சலுகைகளும்
   (3) நியாயமான ஒரு விலையில் தரமான உற்பத்திப்பொருட்களை பெற்றுக்கொள்ளல்
   (4) நியாயமான ஒரு திரும்பலை பெற்றுக்கொள்ளல்

11. வணிக இடருக்கான பிரதான காரணம்
   (1) புத்தாக்கமும் ஆக்கத்திறனும் இல்லாமை (2) சுறுசுறுப்பான நிச்சயமற்ற சூழல்
   (3) முகாமையின் பலவீனங்கள் (4) முயற்சியாண்மையின் தனிமை

12. ஒரு வணிகத்தில் பிற்போக்கான மற்றும் முற்போக்கான வணிகங்கள் காணப்படுகின்றன. சப்பாத்துக்களை உற்பத்தி செய்யும் வணிகத்தைப் போன்ற முற்போக்கான வணிகங்களுக்கானவற்றை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையை தெரிவு செய்க.
   (1) தோல்களை விநியோகிப்பவர்கள், வடிவமைப்பவர்கள், சில்லறை வியாபாரிகள்
   (2) விநியோக முகவர்கள், வடிவமைப்பவர்கள், உப ஒப்பந்தக்காரர்கள்
   (3) விநியோக முகவர்கள், விளம்பரப்படுத்தல் முகவர்கள், சில்லறை வியாபாரிகள்
   (4) பொதிகட்டும் மூலப்பொருட்களை விநியோகிப்பவர்கள், வடிவமைப்பவர்கள், விளம்பரப்படுத்தல் முகவர்கள்

13. முயற்சியாண்மையாளரது நடவடிக்கைகளின் வெற்றிக்காக பெரியளவில் செல்வாக்குச் செலுத்தும் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடலின் ஒரு சிறப்பியல்பு
   (1) மென்பொருளின் கிடைப்பனவுத்தன்மை (2) பூரணத்துவம்
   (3) வலைப்பின்னல் தொடர்பு (4) தகவல்

14. கௌதமனின் சில சிறப்பியல்புகள் கீழே தரப்படுகிறது
   A. மற்றையோர் நிலைக்குள்ளாதல் (empathy) B. சுயதிருப்தி
   C. ஆர்வம் D. கல்வி
   E. அர்ப்பணிப்பு F. நெகிழ்வுத்தன்மை
   மேற்கூறியவற்றுள் முயற்சியாண்மைக்குரிய சியற்பியல்புகள்
   (1) A, B, D, F (2) A, C, E, F (3) A, C, D, F (4) B, C, D, E

15. முயற்சியாண்மையாளர் பல்வேறு வகிபாகங்களையும் (role) மேற்கொள்கின்றார். அவற்றுள் தலைமைத்துவம் என்ற வகிபாகத்தின் கீழ் ஒரு முயற்சியாண்மையாளர் மேற்கொள்ளும் ஒரு தொழிற்பாடு
   (1) திட்டமிடுதல் (2) வளங்களை ஏற்பாடு செய்தல்
   (3) இடர்களை ஏற்றுக் கொள்ளுதல் (4) குழுக்களை வழிநடத்துதல்

[பக். 3 ஐப் பார்க்க

The National e-learning Portal for The General Education

16. திரு. தனராஜா என்பவர் தனது குடும்ப அங்கத்தவர்களின் உதவியுடன் தனது வீட்டில், உணவுகளை தயாரித்து விற்பனை செய்யும் வணிகமொன்றை நடத்துகின்றார். இது எதற்கு உரித்தான வணிகமெனின்
(1) நுண்ணிய அளவு (micro scale) வணிகம் (2) நடுத்தர அளவு வணிகம்
(3) பாரிய அளவு வணிகம் (4) கைத்தொழில் வணிகம்

17. வணிக எண்ணங்களைத் தோற்றுவிப்பதில் முயற்சியாண்மையாளர்கள் மீது சூழல் காரணிகள் மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றுக்கிடையே பின்வருவனவற்றுள் எதனை ஒரு சமூக, கலாசார காரணியாகக் கருத முடியும்?
(1) ஓய்வும் (leisure) பொழுதுபோக்கும் (2) சுகாதாரமும் பாதுகாப்பும்
(3) வழக்கங்களும் நியமங்களும் (customs and norms) (4) போக்குவரத்தும் தொடர்பாடலும்

18. முயற்சியாண்மையாளர்களின் வணிக எண்ணங்கள் ஒவ்வொரு தடவையும் வணிக வாய்ப்புக்களாக மாற்றப்பட முடியாதவையாகும். வணிக எண்ணங்களின் பொருத்தமான தன்மையை மதிப்பிடுவதற்கான காரணிகளை **மட்டும்** உள்ளடக்கியுள்ள விடையை தெரிவு செய்க.
A - நல்ல சந்தை ஒன்று காணப்படுதல்
B - வணிக நிறுவனத்தின் வகை
C - போதியவளவான ஒரு திரும்பல் கிடைத்தல்
D - சட்ட ரீதியான வரையறைகள்
E - நிதியிடல் மூலங்கள்
(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D

19. வெற்றிகரமான ஒரு முயற்சியாண்மையாளராக வர வேண்டுமாயின் வணிகச் சூழலைக் கற்க வேண்டியது அவசியமாகும். வணிகச் சூழலை அகச் சூழல், புறச் சூழல் என வகைப்படுத்தலாம். அட்டவணை A யானது புறச் சூழல் விசைகள் சிலவற்றையும் அட்டவணை B யானது புறச் சூழல் விசைகளுக்கான காரணிகளையும் காட்டுகின்றது.

| A (விசைகள்) | B (காரணிகள்) |
|---|---|
| 1. பொருளாதாரம் மற்றும் மக்கட் தொகையியல் | a. புதிய தொழினுட்பங்களை அறிமுகப்படுத்தல் |
| 2. அரசியல் மற்றும் சட்டம் | b. விதிகளையும் பிரமாணங்களையும் அமுல்படுத்தல் |
| 3. இயற்கை மற்றும் புவியியல் | c. சமயமும் நம்பிக்கையும் (faith and belief) |
| 4. விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் | d. காலநிலை நிலைமைகள் |
| 5. சமூக மற்றும் கலாசாரம் | e. இனங்களின் தொகுப்பு (ethnic composition) |

விசைகளும் காரணிகளும் சரியாக இணைக்கப்பட்டுள்ளதை குறிப்பிடுகின்ற விடையைத் தெரிவு செய்க.
(1) 1 b, 2 d, 3 c, 4 a, 5 e (2) 1 b, 2 e, 3 d, 4 a, 5 c (3) 1 e, 2 b, 3 d, 4 a, 5 c (4) 1 e, 2 b, 3 d, 4 c, 5 a

20. பொருட்களையும் சேவைகளையும் வாங்கச் செய்வதற்காக வணிகன் ஒருவன் நுகர்வோரைத் தூண்டுவதகுற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு முறை
(1) விநியோகித்தல் (2) விலையிடல் (3) விளம்பரப்படுத்தல் (4) பண்டக் குறியிடல்

21. பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும்போது நுகர்வோர் ஒருவரால் பல்வேறு காரணிகளும் கருத்திற்கொள்ளப்படுகின்றது. அவற்றுள் பிரதான காரணிகளை **மாத்திரம்** உள்ளடக்கியுள்ள விடை எது என்பதைத் தெரிவு செய்க.
(1) விலை, நுகர்வோரின் சுவை, கொள்வனவு செய்யும் ஆற்றல்
(2) நுகர்வோரின் வருமானம், சமூக அந்தஸ்து, நுகர்வோரின் சுவை
(3) விலை, பிரதியீட்டுப் பண்டங்களின் விலை, நுகர்வோரின் வருமானம்
(4) நுகர்வோரின் சுவை, சமூக அந்தஸ்து, பண்டக்குறி

22. சந்தைக்கு உற்பத்திப்பொருட்களை கொடைமுனைவு (offer) செய்யும்போது முயற்சியாண்மையாளர்கள் சந்தையைத் துண்டாடுகின்றனர் என்பது வெளிப்படையானதாகும். பின்வரும் அட்டவணை Aஆனது சந்தைத் துண்டாடலுக்குப் பயன்படுத்தப்படும் அடிப்படைகளையும் அட்டவணை B ஆனது அந்த அடிப்படைகளுக்குப் பொருத்தமான காரணிகளையும் காட்டுகின்றது.

| A (அடிப்படைகள்) | B (காரணிகள்) |
|---|---|
| 1. மக்கள் தொகையியல் | a. காலநிலை |
| 2. புவியியல் | b. பால் (gender) |
| 3. நடத்தையியல் | c. வாழ்க்கைப் பாங்கு (live style) |

அடிப்படைகளும் காரணிகளும் சரியாக இணைக்கப்பட்டுள்ளதை குறிப்பிடுகின்ற விடையைத் தெரிவு செய்க.
(1) 1 a, 2 b, 3 c (2) 1 b, 2 c, 3 a (3) 1 c, 2 a, 3 b (4) 1 b, 2 a, 3 c

[பக். 4 இப் பார்க்க

23. பெரும்பாலான உற்பத்திப்பொருட்கள் பண்டப் பெயருடனேயே (brand name) சந்தைக்கு கொடை முனைவு செய்யப்படுகின்றன என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஒரு சில உற்பத்திப்பொருட்களுக்கு பண்டப் பெயரைப் பயன்படுத்துவதன் பிரதான நோக்கம்

(1) நுகர்வோரைக் கவர்தல்

(2) உற்பத்திப்பொருளின் தரத்தை வெளிக்காட்டுதல்

(3) போட்டி உற்பத்திப்பொருட்களில் இருந்து அடையாளப்படுத்துதல்

(4) உற்பத்திப்பொருளின் விசேட தன்மைகளை வெளிக்காட்டுதல்

24. உற்பத்திப்பொருளொன்றின் கிரயத்துக்கு ஒரு குறித்த இலாப வீதத்தைச் சேர்ப்பதன் மூலம் தீர்மானிக்கப்படும் விலை

(1) இலக்குத் திரும்பல் விலை (target return price)

(2) குறித்த வீத இலாபம் வைத்த விலை (mark-up price)

(3) நடைமுறையில் காணப்படும் விலை (going rate price)

(4) இலாபநட்டமற்ற விலை (break-even price)

25. உள்ளூர் சந்தையில் இருந்து நுகர்வோர் ஒருவர் பால்பவுடர் பொதியொன்றைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கை சம்பந்தமான விநியோக வழிமுறையைக் காட்டும் சரியான விடையைத் தெரிவு செய்க

(1) உற்பத்தியாளர் → நுகர்வோர்

(2) உற்பத்தியாளர் → சில்லறை வியாபாரி → நுகர்வோர்

(3) உற்பத்தியாளர் → முகவர் → நுகர்வோர்

(4) உற்பத்தியாளர் → மொத்த வியாபாரி → சில்லறை வியாபாரி → நுகர்வோர்

26. வணிகத்தைத் தொடங்குவதற்கு ஆகக்குறைந்தது பத்துபேர் பங்குபற்றுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படும் வணிக நிறுவன வகை

(1) வரையறுத்த பொதுக்கம்பனி (2) வரையறுத்த தனியார் கம்பனி

(3) கூட்டுறவு சங்கம் (4) பங்குடைமை

● **27** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

ரவீந்திரன் என்பவர் 01.12.2010 இல் குழந்தைகளுக்கான ஆடைகளை வாங்கி விற்கும் வணிகமொன்றை ஆரம்பித்து அதில் தனது சொந்தப் பணமான ரூ. 300 000 ஐ முதலீடு செய்ததுடன் வங்கியிலிருந்தும் ரூ. 200 000 ஐக் கடனாக எடுத்துள்ளார். அவர் இவ்வணிகம் தொடர்பில் கடைக்குத் தேவையான சிறிய கட்டடம் ஒன்றை ரூ. 100 000 இற்கும் தளவாடங்களை ரூ. 50 000 இற்கும் வாங்கினார். அதே நாளில் குழந்தைகளுக்கான ஆடைகளை ரூ. 25 000 இற்குக் காசுக்கும் ரூ. 15 000 பெறுமதியான குழந்தைகளுக்கான ஆடைகளை லம்சல் என்பவரிடமிருந்து கடனுக்கும் கொள்வனவு செய்தார்.

27. ரவீந்திரன் வணிகத்தின் உரிமை மூலதனம்

(1) ரூ. 200 000 (2) ரூ. 300 000 (3) ரூ. 500 000 (4) ரூ. 650 000

28. இவ்வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் வங்கிக் கடன் ரூ. 200 000 எவ்வாறு தாக்கத்தைச் செலுத்தும் என்பதனைக் குறிப்பிடும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| | சொத்துகள் | = | உரிமை மூலதனம் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (1) | + 200 000 | | —— | | + 200 000 |
| (2) | + 200 000<br>− 200 000 | | —— | | —— |
| (3) | + 200 000 | | + 200 000 | | —— |
| (4) | —— | | − 200 000 | | + 200 000 |

29. 01.12. 2010 இல் இவ்வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள்

(1) ரூ. 150 000 (2) ரூ. 190 000 (3) ரூ. 500 000 (4) ரூ. 515 000

30. லம்செல் என்பவரிடமிருந்து கடனுக்கு குழந்தைகளுக்கான ஆடைகள் ரூ. 15 000 இற்கு வாங்கியதைப் பதிவு செய்வதற்கு முதன்மையேடு பயன்படுத்தப்பட்டதுடன் மூல ஆவணமும் பயன்படுத்தப்பட்டது. அவை முறையே

(1) கொள்வனவு நாளேடும் கொடுப்பனவு உறுதிச்சீட்டும்

(2) காசேடும் கொடுப்பனவு உறுதிச்சீட்டும்

(3) கொள்வனவு நாளேடும் பட்டியலும்

(4) காசேடும் பட்டியலும்

[பக். 5 ஐப் பார்க்க

- **31** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

நந்தனி தனது சிறுபராயத்தில் பல்வேறு ஆக்கத்திறன்களைச் செய்வதில் மிகவும் விருப்பமுடையவளாக இருந்தாள். தனது பாடசாலைக் கல்வியின் பின்னர் சுயமாக வேலையும் முயற்சியொன்றில் ஈடுபட எதிர்பார்க்கின்றாள். அவள் முன்பாடசாலை மாணவர்களுக்கான துணியினாலான சித்திரம் வரைந்த பைகளை (bag) உற்பத்தி செய்ய எதிர்பார்க்கின்றாள். முதலில் தனது பிரதேசத்தில் உள்ள முன்பாடசாலைகளுக்கும் பின்னர் நாடு பூராகவும் உள்ள முன்பாடசாலைகளுக்கும் இப்பைகளை விநியோகிக்க எண்ணுகின்றாள். இவ்வணிகத்தில் தனது நிலையான வைப்பிலுள்ள ரூ. 100 000 ஐ முதலீடு செய்ய எண்ணியதுடன் வங்கியில் இருந்து 12 % வருடாந்த வட்டியில் ரூ. 50 000 ஐக் கடனாகப் பெற எதிர்பார்க்கின்றாள். மேலும், தையல் இயந்திரத்தை ரூ. 24 000 இற்கும் வாங்குவதுடன் நகரத்தில் தனது கடைக்குத் தேவையான சிறிய கட்டடமொன்றை ரூ. 1 500 மாதாந்த வாடகையில் எடுத்துக்கொள்ள எதிர்பார்க்கின்றாள். வணிகத்துக்குப் பொருத்தமாக அக்கட்டடத்தை ஏற்பாடு செய்ய ரூ. 5 000 செலவு செய்ய வேண்டும் என மதிப்பிடப்பட்டது. முதல் மாதத்தில் 500 பைகள் தயாரிக்க எதிர்பார்க்கப்பட்டதுடன் அதற்கான மதிப்பிடப்பட்ட செலவுகள் வருமாறு :

| | | |
|---|---|---|
| துணி | ரூ. | 15 000 |
| இயந்திரத்தை இயக்குபவருக்கான சம்பளம் | ரூ. | 7 500 |
| ஷிப்பர் (Zipper) | ரூ. | 5 000 |
| மின்சாரம் | ரூ. | 1 700 |
| வர்ண நூல்கள் | ரூ. | 6 500 |
| தொலைபேசிக் கட்டணம் | ரூ. | 800 |

நந்தினியால் தையல் இயந்திரத்திற்கான பெறுமானத் தேய்வு கிரயத்தில் 10% என்பதுடன், இம்மாதமே 500 பைகளையும் ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம் விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

31. நந்தினியால் தயாரிக்கப்பட்ட வணிகத்திட்டத்தின் எப்பகுதியில் பைகளுக்கான உற்பத்திக் கிரயம் பதிவு செய்யப்படும் ?
(1) நிறைவேற்றுச் சுருக்கம் (2) செயற்பாட்டுத் திட்டம்
(3) சந்தைப்படுத்தல் திட்டம் (4) நிதித்திட்டம்

32. 500 பைகளை தயாரிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த நேர்க் கிரயம்
(1) ரூ. 15 000 (2) ரூ. 21 000 (3) ரூ. 29 000 (4) ரூ. 34 000

33. 500 பைகளை தயாரிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த நேரில் கிரயம்
(1) ரூ. 1 500 (2) ரூ. 3 000 (3) ரூ. 5 000 (4) ரூ. 6 000

34. ஒரு பையைத் தயாரிப்பதற்கான அலகுக் கிரயம்
(1) ரூ. 90 (2) ரூ. 80 (3) ரூ. 77 (4) ரூ. 68

35. இவ்வணிகத்தின் ஆரம்ப நிலையான மூலதனம்
(1) ரூ. 124 000 (2) ரூ. 100 000 (3) ரூ. 25 500 (4) ரூ. 24 000

36. முடிவடைந்த முதல் மாதத்திற்காகத் தயாரிக்கப்படும் மதிப்பிடப்பட்ட ஐந்தொகையில் வங்கிக் கடன் ரூ. 50 000 காட்டப்பட வேண்டியது
(1) மூலதனமாக (2) நடைமுறைப் பொறுப்பாக
(3) நடைமுறையல்லாத பொறுப்பாக (4) நடைமுறையல்லாத சொத்தாக

37. முதல் மாதத்தின்போது 500 பைகளையும் விற்கமுடியுமாயின் முதல் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றில் காட்டப்படும் மொத்த காசு உட்பாய்ச்சல்
(1) ரூ. 200 000 (2) ரூ. 150 000 (3) ரூ. 100 000 (4) ரூ. 50 000

38. முதல் மாதத்திற்காக மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்று தயாரிக்கப்படின் அதில் குறிப்பிடப்படும் வங்கிக் கடன் வட்டியின் தொகை
(1) ரூ. 6 000 (2) ரூ. 1 200 (3) ரூ. 600 (4) ரூ. 500

39. இவ்வணிகத்தின் முற்செயற்பாட்டுச் செலவுகள் (முதலீடு)
(1) ரூ. 150 000 (2) ரூ. 100 000 (3) ரூ. 6 500 (4) ரூ. 5 000

40. வங்கிக் கடனொன்றை நந்தினி பெறக்கூடிய உரிமம் பெற்ற சிறப்பு வங்கி
(1) இலங்கை வங்கி (2) மக்கள் வங்கி
(3) சனச அபிவிருத்தி வங்கி (4) தேசிய அபிவிருத்தி வங்கி

**

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

63 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

## முயற்சியாண்மைக் கற்கை II

**முதலாம்** வினாக்குவும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** பாலன், நகரத்திலுள்ள கௌரவமான ஒரு பாடசாலையில் கல்வி கற்றுள்ளான். பாடசாலைப் பருவத்தில் தனது தந்தையால் நடத்தப்பட்டு வரும் வன்பொருள் வணிகத்துக்கு உதவி செய்துள்ளான். வாடிக்கையாளரின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்குப் பொருத்தமான வகையில் தனது தந்தையின் வணிகத்தை நவீனமயப்படுத்த வேண்டுமென்பது அவனது விருப்பமாகும். ஆயினும் பல வருடங்களாக பாலனின் தந்தை இவ்வணிகத்தைக் கொண்டு நடத்தி விட்டார். எனவே, இச்சந்தர்ப்பத்தில் தனது வணிகத்தில் மாற்றம் செய்ய அவருக்கு விருப்பமில்லை. எப்படியிருப்பினும் இந்த வணிகத்தில் இருந்து பெரிய அளவிலான வருமானத்தை அவர் சம்பாதித்துள்ளார். வாடிக்கையாளர்களுடன் சிநேக பூர்வமாகப் பேசுவதனூடாக அவர்களது விருப்பங்களையும் எண்ணங்களையும் விளங்கிக்கொள்வதற்குப் பாலன் முயற்சித்தான். பிறப்பிலேயே அவன் எல்லோருடனும் பழகக்கூடியவனாக இருந்ததனால் வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாகவும் அவர்கள் மத்தியில் பிரபல்யமாகவும் அவன் காணப்பட்டான். நியாயமான ஒரு விலையில் தரமான கட்டடப் பொருட்களை வழங்குவதன் மூலமும் வாடிக்கையாளர் வாங்கும் கட்டடப் பொருட்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் மூலமும் இவ்வணிகத்தை விரிவுபடுத்துவதற்கான சாத்தியம் காணப்படுவதனை பாலன் உணர்ந்து கொண்டான். காசோலை, கடனட்டை மற்றும் வரவு அட்டை என்பவற்றின் மூலம் கொடுப்பனவு வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் தொலைபேசி மூலம் கட்டளைகளைப் பெறுவதற்கும் பாலன் எதிர்பார்க்கின்றான். அதன் பிரகாரம் தனியுடைமை வியாபாரமாகக் கொண்டு நடத்தப்படும் தந்தையின் வணிகத்தில் பாலன் இணைந்துகொள்ள எதிர்பார்க்கின்றான். பொருத்தமான ஒரு வகை வணிக நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்கு அவன் சிந்திக்கின்றான். அப்புதிய வணிகம் சட்டரீதியான பாதுகாப்பையும் நற்பெயரையும் அத்துடன் பதிவு செய்யத்தக்கதாகவும்கூட அது இருக்க வேண்டுமெனவும் அவன் எதிர்பார்க்கின்றான் அவனது தந்தையின் தற்போதைய வணிகம் தொடர்பாக கணிப்பிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலை வருமாறு:

மொத்த நிலையான சொத்துக்கள் - ரூ. 10 மில்லியன் மொத்த பொறுப்புக்கள் - ரூ. 5 மில்லியன்
மொத்த நடைமுறைச் சொத்துக்கள் - ரூ. 25 மில்லியன்

வணிகத்தை நவீனப்படுத்துவதற்காகப் பாலனின் தந்தை ரூ. 20 மில்லியனை மேலதிகமாக முதலீடு செய்ய உடன்பட்டார். புதிய வணிகத்துக்காக அவர்கள் பின்வருவனவற்றை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| இரண்டு லொறிகள் | - ரூ. 6 மில்லியன் | இரண்டு லான்ட்மாஸ்ரர்கள் | - ரூ. 1 மில்லியன் |
| பல்வகையான உபகரணங்கள் | - ரூ. 2 மில்லியன் | கட்டடத் தொகுதி | - ரூ. 5 மில்லியன் |
| வியாபாரச் சரக்குகள் | - ரூ. 4 மில்லியன் | | |

(i) முயற்சியாண்மையாளர்கள் பிறப்பினாலா அல்லது புறத்தூண்டல் மூலமாகவா உருவாகின்றனர். மேலுள்ள சம்பவத்தில் பாலன் எவ்வகையான முயற்சியாண்மையாளர் ? உமது காரணங்களைத் தருக.

(ii) பாலனில் காணக்கூடிய முயற்சியாண்மைக்குரிய சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

(iii) வணிகம் தொடர்பில் பாலனுக்கு தூரநோக்கு காணப்படுகின்றதா என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(iv) மேற்கூறிய சம்பவத்தின் பிரகாரம் பாலனின் புதிய வணிகம் வெற்றியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிடுக.

(v) பாலனும் அவனது தந்தையும் உருவாக்கக்கூடிய மிகவும் பொருத்தமான வகை வணிக நிறுவனத்தைக் குறிப்பிடுக.

(vi) பாலனின் தந்தையின் வணிகத்தின் தற்போதைய மூலதனம் யாது ?

[பக். 7 ஐப் பார்க்க

(vii) புதிய வணிகத்தின் ஆரம்பத்தில் காணப்படும் மொத்த நிலையான சொத்துக்களையும் நடைமுறைச் சொத்துகளையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(viii) புதிய வணிகத்தின் மூலதனம் மற்றும் பொறுப்புக்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(ix) புதிய வணிகத்தின் மதிப்பிடப்பட்ட செயற்பாட்டுக் கிரயம் எவ்வளவு ?

(x) இந்தச் சம்பவத்தில் குறிப்பிடப்படாத போதும் புதிய வணிகத்தின் வெற்றிக்காக பாலனால் தயாரிக்கப்பட வேண்டிய அத்தியாவசியமான தேவைப்பாடு யாது ?

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

2. (i) 'ஆக்கத்திறன்' மற்றும் 'புத்தாக்கம்' என்பவற்றுக்கிடையே உள்ள தொடர்பைச் சுருக்கமாக விளக்குக.

(ii) பெண் முயற்சியாண்மையாளர்களுக்கு கடன் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படுமென வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் அறிவித்துள்ளன. இதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

(iii) வணிக முயற்சியாண்மையாளர்கள், சமூக முயற்சியாண்மையாளர்கள் என இருவகையான முயற்சியாண்மையாளர்கள் காணப்படுகின்றனர். இந்த **சமூக முயற்சியாண்மையாளர்** யாரென விளக்குக.

(iv) முயற்சியாண்மை அபிவிருத்தியின் ஊடாக நாடு அடையக்கூடிய **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(v) முயற்சியாண்மையாளராகத் தொழிற்படும் நபர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அவ்வாறான **இரண்டு** சவால்களைக் குறிப்பிடுக.

($2 \times 5 = 10$ புள்ளிகள்)

3. (i) ஆரம்பித்து ஐந்து வருடங்களுள் பெரும்பாலான சிற்றளவு வணிகங்கள் மூடப்பட்டுள்ளன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சிற்றளவு வணிகளின் இவ்வாறான தோல்விக்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.

(ii) முயற்சியாணமையாளர்கள் உருவாகுவதற்குப் பல பின்புலக் காரணிகள் காணப்படுகின்றன. அவ்வாறான **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக.

(iii) 'வணிக இடர்' என்பதனால் கருதப்படுவது யாது ?

(iv) முயற்சியாண்மையாளரின் வகிபாகத்தின் வெற்றிக்கு நபர்களுக்கிடையிலான திறன்கள் (interpersonal skills) என்பது மிகவும் பயனுடையதாகும். இங்கு குறிப்பிடப்படும் நபர்களுக்கிடையிலான திறன்கள் எனப்படுபவை யாவை ?

(v) வணிக உலகம் என்பது சவால்கள் நிறைந்தது என்பது போல பிரச்சினைகளும் நிறைந்தது. முயற்சியாண்மையாளர்கள் பின்பற்ற வேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்கும் நடைமுறைகளை வரிசைக்கிரமமாகக் காட்டுக.

($2 \times 5 = 10$ புள்ளிகள்)

4. வணிக எண்ணங்கள் உருவாவதற்கு மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை அடையாளம் காண்பது போல சமூக, சூழல் போக்குகள் மற்றும் பிரச்சினைகளும் கிரமமாக உந்துகின்றன.

(i) தேவைகள் மற்றும் விருப்பங்கள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக.

(ii) வணிகத்தின் அகச்சூழலை வகைப்படுத்துக.

(iii) பொருளாதாரச் சூழலில் உள்ளடக்கப்படக்கூடிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

(iv) வணிக எண்ணத்தின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக.

(v) வணிக எண்ணம் மற்றும் வணிக வாய்ப்பு ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பைச் சுருக்கமாக விளக்குக.

($2 \times 5 = 10$ புள்ளிகள்)

5. ஒரு நல்ல வணிக எண்ணத்தை ஒரு வணிக வாய்ப்பாக மாற்றும்போது வணிக நிறுவன வகைகள் கூட முக்கியமானவையாகும்.

(i) வணிக எண்ணத்துக்குப் பொருத்தமான வகையில் வணிக நிறுவனத்தைத் தெரிவு செய்யும்போது கருத்திற் கொள்ள வேண்டிய **நான்கு** அளவீடுகளைக் குறிப்பிடுக.

(ii) உடைமை அடிப்படையில் வணிக நிறுவனங்களின் வகைகளைப் பாகுபடுத்துக.

(iii) தனியுடைமையுடன் ஒப்பிடும்போது பங்குடைமையின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(iv) ஏனைய வகையான வணிக நிறுவனங்களில் காணமுடியாததும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இயற்கையாக அமைந்ததுமான சிறப்பியல்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) பின்வரும் வகையான வணிக நிறுவனங்களில் **மூலதனம்** மற்றும் **முகாமைத்துவம்** போன்றன எவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதனைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(அ) தனியுடைமைகள் (ஆ) பங்குடைமைகள்
(இ) வரையறுத்த பொதுக்கம்பனிகள் (ஈ) கூட்டுறவுச் சங்கங்கள்

($2 \times 5 = 10$ புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**6.** 01.11.2010 இல் ஆரம்பித்த சாந்தி வணிகத்தின் சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ரூ. |
|---|---|
| சாந்தி முதலீடு செய்த மூலதனம் | 150 000 |
| தளவாடங்கள் வாங்கியது | 25 000 |
| காசுக்கு வாங்கிய பொருட்கள் | 65 000 |
| கடனுக்கு வாங்கிய பொருட்கள் | 55 000 |
| உள்வந்த வண்டிக் கூலி செலுத்தியது | 3 500 |
| காசு விற்பனைகள் | 76 000 |
| கடன் விற்பனைகள் | 60 000 |
| கொடுத்த வாடகை | 2 000 |
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 49 000 |
| கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசு | 47 500 |
| ஊழியர்களுக்கு செலுத்திய சம்பளங்கள் | 5 000 |
| சாந்தியின் பற்றுகள் | 7 000 |

(i) சாந்தி வணிகத்தின் மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களில் இரண்டு கொடுக்கல் வாங்கல்கள் காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை. இந்த இரண்டு கொடுக்கல் வாங்கல்களையும் குறிப்பிடுவதுடன் இவற்றைப் பதிவதற்கு பயன்படுத்த வேண்டிய முதன்மை ஏடுகளையும் மூல ஆவணங்களையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) ஏனைய கொடுக்கல் வாங்கல்களைக் காசேட்டில் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் **இரண்டு** மூல ஆவணங்களைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி சாந்தி வணிகத்தின் காசேட்டைத் தயாரிப்பதுடன் மீதியையும் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

The National ... General Education

**7.** றொசான் என்பவர் 01.01.2011 இல் சீமெந்து கிறில்களைத் (grills) தயாரிக்கும் வணிகம் ஒன்றைத் தொடங்க எதிர்பார்க்கின்றார். இதற்காக ரூ. 120 000 பெறுமதியான சொந்தக் கட்டடத்தைப் பயன்படுத்த எண்ணியதுடன் 12 % வருடாந்த வட்டியில் ரூ. 100 000 ஐ வங்கிக் கடனாகவும் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றார். இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ. 24 000 இற்கு வாங்க உத்தேசிக்கப்பட்டது. 1 000 கிறில்களை முதல் மாதத்தில் செய்ய எண்ணியதுடன் அதற்காக மதிப்பிடப்பட்ட செலவுகள் வருமாறு:

| | |
|---|---|
| சீமெந்து | ரூ. 30 000 |
| மணல் | ரூ. 15 000 |
| தீந்தை | ரூ. 2 000 |
| மூலப்பொருள்களுக்கான போக்குவரத்து | ரூ. 4 500 |
| மின்சாரம் | ரூ. 2 500 |

கிறில்களைத் தயாரிப்பதற்காக ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் சம்பளம் ரூ. 5 000 என்ற அடிப்படையில் இரண்டு ஊழியர்களைச் சேரத்துக் கொள்ளவும் அலுவலகச் செலவுகளுக்காக ரூ. 2 000 ஐயும் இயந்திரம் மற்றும் உபகரணங்களுக்கு வருடாந்தம் கிரயத்தின் மீது 10% பெறுமானத் தேய்வு செய்யவும் றோசான் எண்ணியுள்ளார். ஒரு கிறிலை ரூ. 100 வீதம் சகல கிறில்களையும் அந்த மாதத்திலேயே விற்க எதிர்பார்க்கின்றார்.

(i) நேர் மூலப்பொருள், நேரக்கூலி, ஏனைய நேர்ச் செலவுகள், மறைமுகச் செலவுகள் (மேந்தலைகள்), மொத்த உற்பத்திக் கிரயம் போன்றவற்றைத் தனித்தனியே குறிப்பிடக்கூடியதாக 31.01.2011 இல் முடிந்த மாதத்திற்கான கிரய மதிப்பீட்டைத் தயாரிக்குக. (05 புள்ளிகள்)

(ii) 31.01.2011 இல் முடிவடைந்த மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட வருமானக் (இலாப நட்டக்) கூற்றைத் தயாரிக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

* * *

OL/2010/65-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**65 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

| | |
|---|---|
| ද්විතිය භාෂාව - දෙමළ I, II | පැ තුනයි |
| இரண்டாம் மொழி - தமிழ் I, II | மூன்று மணித்தியாலம் |
| Second Language - Tamil I, II | Three hours |

## இரண்டாம் மொழி - தமிழ் I

கவனிக்க :
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசிக்க.

සැලකිය යුතුයි :
(i) **සියලු ම** ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න. මෙම **I** පත්‍රය සඳහා මුළු ලකුණු **40**කි.
(ii) අංක **1** සිට **40** තෙක් ප්‍රශ්නවල, දී ඇති **(1), (2), (3), (4)** පිළිතුරුවලින් **නිවැරදි හෝ වඩාත් ගැළපෙන හෝ** පිළිතුර තෝරා ගන්න.
(iii) **ඔබට සැපයෙන උත්තර පත්‍රයේ එක් එක් ප්‍රශ්නය සඳහා දී ඇති කව අතුරෙන්, ඔබ තෝරා ගත් පිළිතුරෙහි අංකයට සැසඳෙන කවය තුළ (X) ලකුණ යොදන්න.**
(iv) එම පිළිතුරු පත්‍රයේ පිටුපස දී ඇති අනෙක් උපදෙස් ද පරෙස්සමෙන් කියවා ඒවා පිළිපදින්න.

**Note:**
(i) Answer **all** questions. Total marks for this paper **I**, is 40.
(ii) In each of the questions **1** to **40**, pick one of the alternatives (1), (2), (3), (4) which you consider is correct or most appropriate.
(iii) **Mark a cross (X) on the number corresponding to your choice in the answer sheet.**
(iv) *Further instructions are given on the back of the answer sheet. Follow them carefully.*

- **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லுக்குரிய **ஒத்தகருத்துள்ள** சொல்லைத் தெரிவு செய்க.
  **1** සිට **5** තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති පදයට **සමාන පදය** තෝරන්න.
  Select the **synonym** word in questions **1** to **5** for the word given at the begining.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சமயம் : | (1) மதம் | (2) கடவுள் | (3) இறைவன் | (4) முருகன் |
| 2. | வீடு : | (1) கோயில் | (2) மனை | (3) அறை | (4) நிலம் |
| 3. | காடு : | (1) பூங்கா | (2) வனம் | (3) குளம் | (4) நாடு |
| 4. | கோபம் : | (1) சீற்றம் | (2) சந்தோசம் | (3) மகிழ்ச்சி | (4) வெட்கம் |
| 5. | பறவை : | (1) காகம் | (2) ஊர்வன | (3) பட்சி | (4) மிருகம் |

- **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லுக்குரிய **எதிர்க்கருத்துள்ள** சொல்லைத் தெரிவு செய்க.
  **6** සිට **10** තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති පදයට **විරුද්ධ පදය** තෝරන්න.
  Select the **antonym** word in questions **6** to **10** for the word given at the begining.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | உள்ளே : | (1) தூரம் | (2) அருகே | (3) கிட்ட | (4) வெளியே |
| 7. | பிறப்பு : | (1) உயிர் | (2) வளர்ப்பு | (3) குழந்தை | (4) இறப்பு |
| 8. | தொடக்கம் : | (1) ஆரம்பம் | (2) அத்திவாரம் | (3) முடிவு | (4) ஆயத்தம் |
| 9. | சுவர்க்கம் : | (1) முக்தி | (2) உலகம் | (3) நரகம் | (4) பருவம் |
| 10. | இன்பம் : | (1) துன்பம் | (2) மகிழ்ச்சி | (3) வேதனை | (4) நட்டம் |

[பக். 2 ஐப் பார்க்க /2 වන පිටුව බලන්න /see page 2

- **11** முதல் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள **வெற்றிடத்தை நிரப்புவதற்குச்** சரியான விடையைத் தெரிவு செய்க.
  **11** සිට **15** තෙක් ප්‍රශ්නවල දී ඇති වාක්‍යවල **හිස්තැන් සම්පූර්ණ කිරීමට** සුදුසු පදය පහත දී ඇති වචන අතුරෙන් තෝරන්න.
  In questions **11** to **15** choose the correct answer from those given below to **fill in the blanks**.

11. சுந்தரியின் காதில் மணி ஓசை ............................ எனக் கேட்டது.
    (1) கணீர்கணீர் (2) சலசல (3) பளபள (4) கலகல

12. குமரன் ........................... யோசித்து முடிவெடுத்தான்.
    (1) கண்ணும் கருத்துமாய் (2) போகடிபோக்காய்
    (3) அங்கும் இங்குமாய் (4) ஆற அமர

13. குயில் கூவும் என்பதுபோல காகம் ............................
    (1) சத்தமிடும். (2) கரையும். (3) இரையும். (4) கூவும்.

14. அவரையின் உள்ளீடு பருப்பு; பலாப்பழத்தின் உள்ளீடு ............................
    (1) நுங்கு (2) சதை (3) சுளை (4) தோல்

15. இளனி என்ற பேச்சு மொழியின் திருத்தமான எழுத்து வடிவம் ............................
    (1) இலனீர் (2) இளநீர் (3) இளனீர் (4) இலநீர்

- **16** முதல் **18** வரையான வாக்கியங்களில் **வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான** சொல்லைத் தெரிந்தெடுக்க.
  **16** සිට **18** තෙක් ප්‍රශ්නවල දී ඇති වාක්‍යවල **හිස්තැන් සම්පූර්ණ කිරීමට වඩාත් සුදුසු පදය** තෝරන්න.
  Select the **most suitable word to fill the blanks** in each sentence in questions **16** to **18.**

16. உழவன் ............................ வண்டியில் பூட்டினான்
    (1) மாடு (2) மாட்டை (3) மாட்டில் (4) மாட்டால்

17. மதனுடன் ............................ காலையில் பாடம் படித்தான்.
    (1) காமி (2) காமிக்கு (3) காமியால் (4) காமியின்

18. இலங்கை இந்து ............................ அமைந்துள்ளது.
    (1) சமுத்திரம் (2) சமுத்திரத்தை (3) சமுத்திரத்தினுள் (4) சமுத்திரத்தில்

- **19** முதல் **21** வரையுள்ள வினாக்களின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய பொருத்தமான **வினாவைத்** தெரிவு செய்க.
  **19** සිට **21** ප්‍රශ්න සඳහා මුලින් දී ඇති වාක්‍යය පිළිතුර වශයෙන් ලබා ගැනීමට සුදුසු **ප්‍රශ්නය** තෝරන්න.
  In questions **19** to **21** pick out the most suitable **question** to get the answer given at the beginning.

19. யானைகள் நீராடிய காட்சியை எங்களால் மறக்கமுடியாது.
    (1) எவை நீராடிய காட்சியை எங்களால் மறக்க முடியாது ?
    (2) எது நீராடிய காட்சியை எங்களால் மறக்க முடியாது ?
    (3) யார் நீராடிய காட்சியை எங்களால் மறக்க முடியாது ?
    (4) எங்கே நீராடிய காட்சியை எங்களால் மறக்க முடியாது ?

20. நாங்கள் விக்டோரியா நீர்த்தேக்கத்தை அடைந்தோம்.
    (1) நாங்கள் எப்படி நீர்த்தேக்கத்தை அடைந்தோம் ?
    (2) நாங்கள் எந்த நீர்த்தேக்கத்தை அடைந்தோம் ?
    (3) நாங்கள் எங்கே நீர்த்தேக்கத்தை அடைந்தோம் ?
    (4) நாங்கள் எவ்வாறு நீர்த்தேக்கத்தை அடைந்தோம் ?

[பக். 3 ஐப் பார்க்க /3 වන පිටුව බලන්න /see page 3

21. பூங்காவைச் சுற்றி மகாவலி ஆறு சலசல என ஓடிக்கொண்டிருந்தது.
   (1) பூங்காவைச் சுற்றி மகாவலி ஆறு எங்கே ஓடிக் கொண்டிருந்தது ?
   (2) பூங்காவைச் சுற்றி மகாவலி ஆறு ஏன் ஓடிக் கொண்டிருந்தது ?
   (3) பூங்காவைச் சுற்றி மகாவலி ஆறு எவ்வாறு ஓடிக் கொண்டிருந்து ?
   (4) பூங்காவைச் சுற்றி மகாவலி ஆறு எப்போது ஓடிக் கொண்டிருந்தது ?

- **22** முதல் **24** வரையுள்ள வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லுடன் எவ்வித **தொடர்பும் இல்லாத சொல்லைத்** தெரிந்தெடுக்க.
  **22** සිට **24** තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති පදයට කිසිදු ආකාරයකින් **සම්බන්ධයක් නොමැති** වචනය තෝරන්න.
  In questions **22** to **24** select the suitable word which is completely **unrelated** to the word given at the begining.

22. நித்திரை : (1) துயில் (2) துகில் (3) தூக்கம் (4) உறக்கம்
23. கடல் : (1) ஆழி (2) சமுத்திரம் (3) நதி (4) சாகரம்
24. கண் : (1) விழி (2) இமை (3) நேத்திரம் (4) நயனம்

- **25** முதல் **27** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சொல் வரிசையில் **எழுத்துப் பிழையுள்ள** சொல்லைத் தெரிவு செய்க.
  **25** සිට **27** තෙක් ප්‍රශ්නවල එක් එක් වචන පේළියේ **වැරදි ලෙස අකුරු යෙදී ඇති** වචනය තෝරන්න.
  In questions **25** to **27** select the word that is **incorrectly spelt** in the following rows of words.

25. (1) உரல் (2) உறிமை (3) உலகம் (4) உரித்து
26. (1) வாசல் (2) வானம் (3) வாள்வு (4) வாடகை
27. (1) பசுமை (2) பணம் (3) பலம் (4) பசமை

- **28** முதல் **32** வரையுள்ள வினாக்களிலே **வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான** சொல்லைக் கீழே உள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.
  **28** සිට **32** තෙක් ප්‍රශ්නවල **හිස්තැන් පිරවීම සඳහා වඩාත් ම සුදුසු** වචනය පහත දී ඇති වචන අතුරෙන් තෝරන්න.
  In questions **28** to **32** choose the **most appropriate** word from those given below **to fill the blanks.**

28. பால் .............................. பூனை நன்றாகத் தூங்கியது.
   (1) குடியால் (2) குடித்த (3) குடித்தால் (4) குடிக்கின்றது.

29. பண்டைக் காலத்தில் பிராணிகளே போக்குவரத்துக்குப் ..............................
   (1) பயன்படுத்தப்பட்டன. (2) பயன்படுத்தப்படும்.
   (3) பயன்படுத்தப்படலாம். (4) பயன்படுத்தப்படுகின்றன.

30. .............................. என்ன குறை நேர்ந்தது ?
   (1) எவ்வளவுக்கு (2) எத்தனைக்கு (3) யாவருக்கு (4) உனக்கு

31. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ..............................
   (1) உதவும். (2) உதவுகிறது. (3) உதவாது. (4) உதவக்கூடும்.

32. நீ கொழும்பு வந்தால் என்னுடன் ..............................
   (1) தங்கினாய். (2) தங்குவேன். (3) தங்கலாம். (4) தங்குவான்.

- **33** முதல் **35** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலிற் கொடுக்கப்பட்டுள்ள (அ), (ஆ) என்னும் இரு வாக்கியங்களையும் பொருள் வேறுபடாதவாறு ஒரு வாக்கியமாக இணைக்க வேண்டும். இணைத்துக் காட்டப்பட்டுள்ள நான்கு வாக்கியங்களுள் சரியானதைத் தெரிவு செய்க.
  **33** සිට **35** තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති (அ) හා (ஆ) වාක්‍ය දෙක අර්ථය වෙනස් නො වන සේ තනි වාක්‍යයක් ලෙස සම්බන්ධ කළ යුතු වේ. යෝජිත සම්බන්ධ හතර අතුරෙන් නිවැරදි වාක්‍යය තෝරන්න.
  In each of the questions **33** to **35** the two sentences (அ) and (ஆ) given at the head are to be combined into a single sentence without changing the meaning. Choose the correct sentence out of the four combinations suggested.

33. (அ) அப்பா இன்று வருவார்.
   (ஆ) அப்பா புத்தகம் வாங்கிக் கொண்டு வருவார்.
   (1) அப்பா இன்று வந்து புத்தகம் வாங்கித் தருவார்.
   (2) அப்பா இன்று புத்தகம் கொண்டு வருவார்.
   (3) அப்பா இன்று புத்தகம் வாங்கிக் கொண்டு வருவார்.
   (4) அப்பா இன்று புத்தகத்தோடு வீடு வருவார்.

[பக். 4 ஐப் பார்க்க /4 වන පිටුව බලන්න /see page 4

17448

34. (அ) குமரன் தோட்டத்துக்குப் போனான்.
    (ஆ) குமரன் பழங்களைப் பறித்தான்.
    (1) குமரன் தோட்டத்துக்குப் போய் பழங்களைப் பறிப்பான்.
    (2) குமரன் தோட்டத்துக்குப் போய் பழங்களைப் பறித்தான்.
    (3) குமரன் தோட்டம் போய் பழங்களைப் பறிக்கவுள்ளான்.
    (4) குமரன் தோட்டத்தில் பழங்களைப் பறிக்கிறான்.

35. (அ) இலங்கை ஒரு தீவு
    (ஆ) இலங்கை கடலாற் சூழப்பட்டிருக்கிறது.
    (1) இலங்கை கடலால் சூழப்பட்ட தீவு.
    (2) இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவு.
    (3) இலங்கை கடலாலும் சூழப்பட்ட தீவு.
    (4) இலங்கை கடலிலுள்ள ஒரு தீவு.

- **36** முதல் **40** வரையுள்ள வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குப் பதிலாக இடத்தக்க **தனிச்சொல்லைத்** தெரிவு செய்க.
  **36** සිට **40** තෙක් ප්‍රශ්නවල දී ඇති ප්‍රකාශ වෙනුවෙන් යෙදිය හැකි **තනි වචනය** තෝරන්න.
  Select the suitable **single word** for the group of words in questions **36** to **40**.

36. மிக விரைவாக செய்தியை அனுப்பக் கூடிய ஊடகம்
    (1) கடிதம் (2) இணையம் (3) தபால் (4) தந்தி

37. பொருள் சேர்த்து வைக்கப்படும் இடம்
    (1) திணைக்களம் (2) வங்கி (3) அரும்பொருட்சாலை (4) களஞ்சியம்

38. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்கப்படுவது
    (1) பாதுகாப்பு (2) புனரமைப்பு (3) நிவாரணம் (4) உறுதியுரை

39. அகரவரிசைப்படி சொற்களை நிரைப்படுத்தி பொருள் கூறும் நூல்
    (1) இலக்கியம் (2) புத்தகம் (3) அகராதி (4) கலைக்களஞ்சியம்

40. அறுபதாவது ஆண்டிறுதியில் எடுக்கப்படும் விழா
    (1) மணி விழா (2) பவள விழா (3) நூற்றாண்டு விழா (4) வெள்ளி விழா

the National e-learning Portal for the General Education

* *

[பக். 5 ஐப் பார்க்க /5 වන පිටුව බලන්න /see page 5

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**65 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2010**

ද්විතීය භාෂාව - දෙමළ I, II
இரண்டாம் மொழி - தமிழ் I, II
**Second Language - Tamil I, II**

## இரண்டாம் மொழி - தமிழ் II

* பகுதி I இல் உள்ள **முதலாம் இரண்டாம்** வினாக்களையும் பகுதி II இல் ஏதேனும் **ஒரு** வினாவையும் பகுதி III இல் ஏதேனும் **ஒரு** வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.
* I කොටසේ අංක **1** හා **2** ප්‍රශ්න ඇතුළුව **II** හා **III** කොටස්වලින් ප්‍රශ්න **එක** බැගින් තෝරා ගෙන ප්‍රශ්න **හතරකට** පිළිතුරු සපයන්න.
* Answer **four** questions including question No. 1 and 2 in **Part I** and selecting **one** question from **each of Part II and Part III**.

### பகுதி I

**1.** பின்வரும் தலைப்புகளுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **150** சொற்களில் அமையுமாறு ஒரு கட்டுரை எழுதுக.
පහත දැක්වෙන මාතෘකාවලින් එකක් පිළිබඳ ව වචන **150**ක පමණ රචනයක් ලියන්න.
Write an essay of about **150** words on any **one** of the following topics.

(i) மரம் வளர்ப்போம்
(ii) சித்திரைப் புத்தாண்டு
(iii) எனது பாடசாலை பரிசளிப்பு விழா
(iv) கல்விச் சுற்றுலாவின் பயன்கள்
(v) 'மனிதனை முழு மனிதனாக்குவது வாசிப்பு'

(20 புள்ளிகள்)

**2.** 'அ' நிரலில் **தடித்த எழுத்தில்** உள்ள சொல்லுக்குப் பொருத்தமான சொல்லை 'ஆ' நிரலில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான வகையில் பூர்த்தி செய்து உமது விடைத்தாளில் மீண்டும் எழுதுக.
පහත දැක්වෙන 'அ' යටතේ ඇති වාක්‍යවල තද **කළු අකුරින්** ඇති පද සුදුසු පරිදි ගළපා 'ஆ' යටතේ එන වාක්‍යවල හිස්තැන් සම්පූර්ණ කර ඔබේ පිළිතුරු පත්‍රයෙහි ලියන්න.
Fill the blanks in the sentences in **'ஆ'** with the suitable form of the words in **thick type** in the sentences in **'அ'** and write them in your answer script.

| | 'அ' | 'ஆ' |
|---|---|---|
| (i) | **ஆசிரியர்** எங்களைக் குழுக்களாகப் பிரித்தார். | ..................... எங்களைக் குழுக்களாகப் பிரித்தனர். |
| (ii) | நீ நேற்று இங்கு **வரவில்லை.** | நீங்கள் நேற்று இங்கு ........................ |
| (iii) | நான் பூரண கும்பம் வைத்து வந்தாரை வரவேற்கத் **தயாரானேன்.** | நாங்கள் பூரண கும்பம் வைத்து வந்தாரை வரவேற்கத் ........................ |
| (iv) | **அவர்** மேடையில் சென்று அமர்ந்தார். | .................. மேடையில் சென்று அமர்ந்தனர். |
| (v) | கமலாவும் சுந்தரியும் **வந்தனர்.** | கமலா சுந்தரியுடன் ........................ |
| (vi) | **நான்** நாளை வருவேன். | .................. நேற்று வந்தாய். |
| (vii) | மயில் தோகை விரித்து **ஆடியது.** | மயில்கள் தோகை விரித்து .................. |
| (viii) | நீ **பார்.** | நீங்கள் .................. |
| (ix) | இராமன் வீடு **கட்டினான்.** | வீடு இராமனால் .................. |
| (x) | நேற்று மழை **பெய்தது.** | நாளை மழை ........................ |

(20 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க /6 වන පිටුව බලන්න /see page 6

## பகுதி II

- **3** ஆம் **4** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை எழுதுக.
  **3, 4** යන ප්‍රශ්නවලින් ඕනෑ ම **එකකට** පිළිතුරු සපයන්න.
  Answer any **one** question from **3, 4.**

**3.** பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை **25 சொற்களில்** எழுதுக.
පහත සඳහන් කොටසේ අදහස වචන **25කින්** පමණ සාරාංශ කර ලියන්න.
Write a summary of the following passage in about **25 words.**

இலங்கை இலக்கியம் பற்றிப் பேசும்போது முதலில் நினைவுக்கு வரக்கூடிய ஓர் எழுத்தாளர் மார்ட்டின் விக்கிரமசிங்க ஆவார். மனித வாழ்வில் அழகினையும் முன்னேற்றத்தையும் அவர் காண விழைந்தார். அவ்வாறு விழைந்த மார்ட்டின் விக்கிரமசிங்க, தம் அனுபவங்களையும் இலட்சியங்களையும் சிந்தனைகளையும் மக்களோடு பகிர்ந்து கொள்வதற்கு இலக்கியத்தை ஊடகமாகக் கையாண்டார். மனிதரிடையே ஏமாற்றுக்காரர்களும் ஏற்றத்தாழ்வுகளும் ஒழிய வேண்டுமென்பதில் ஆர்வமிக்கவராக இருந்தார். எண்ணங்களைச் செவ்வனே வெளியிடத்தக்க எழுத்தாற்றல் வாய்ந்தவராகவும் அவர் விளங்கினார். எழுத வேண்டும் என்பதற்காகவோ பணமும் புகழும் கருதியோ அவர் எழுத்துலகில் புகுந்தவரல்லர்; மனித சமூகத்தைச் சீராக்கி மேம்படுத்த வேண்டுமென்ற அக்கறையுடன் எழுதினார். அதனால் அவர் மக்களால் பெரிதும் மதிக்கப்படும் ஒருநிலையை எய்தினார். *(10 புள்ளிகள்)*

**4.** பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உமது மொழிநடையில் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.
පහත දැක්වෙන ඡේදය කියවා අසා ඇති ප්‍රශ්නවලට සම්පූර්ණ පිළිතුරු ඔබේ වචනවලින් සපයන්න.
Read the following passage and answer the questions given below in complete sentences in your own words.

உலகில் எங்கும் காடழிக்கும் கேடு நடக்கிறது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இயற்கைக் காடுள்ள பிரதேசம் வெகுவாகக் குறைந்துவிட்டது. இப்பொழுது உலகில் பல பகுதிகளிலுமுள்ள அயனமண்டல மழைக்காடுகள் வேகமாக அழிக்கப்படுகின்றன. காடழிப்பில் இலங்கையரான நாங்களும் சளைத்தவர்களல்லர். போன நூற்றாண்டு 1900 இல் பிறந்தபோது எமது நாட்டின் மொத்த நிலப்பரப்பான 65 525 ஹெக்டேர்களில் 70 சதவீதம் காடாகவிருந்தது. புதிய நூற்றாண்டு 2000 இல் ஆரம்பிக்கும்போது 30 சதவீத நிலப்பரப்பு மட்டுமே காடாகவிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் 23 சதவீத நிலம்தான் அடர்ந்த காடாகவிருக்கிறது. எஞ்சிய காட்டு நிலம் முட்புதராலானது. அடர்ந்த காடு மேலும் குறையலாமென மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்ட இலங்கையின் பிரதான மழைக்காடான சிங்கராஜ வனத்தில்கூட காடழிப்பு களவாக நடக்கிறது.

(i) இந்த உரைப் பகுதி எதைப் பற்றிப் பிரதானமாகக் கூறுகின்றது ?
(ii) ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இயற்கைக் காட்டுப் பகுதி ஏன் குறைந்து விட்டது ?
(iii) இலங்கையர் எதில் சளைத்தவர்களல்லர் ?
(iv) புதிய நூற்றாண்டு ஆரம்பத்தில் இலங்கையிலுள்ள காட்டின் அளவு எத்தனை சதவீதம் ?
(v) இலங்கையின் பிரதான காடு எது ? அங்கு காடழிப்பு நடைபெறுகிறதா ? *(10 புள்ளிகள்)*

## பகுதி III

- **5** ஆம் **6** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை எழுதுக.
  **5, 6** යන ප්‍රශ්නවලින් ඕනෑම **එකකට** පමණක් පිළිතුරු සපයන්න.
  Answer any **one** question from **5, 6.**

**5.** உங்கள் பாடசாலையில் நடைபெறவிருக்கும் கலைவிழாவில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்குமாறு உங்கள் ஊரிலுள்ள கலைஞர் ஒருவருக்கு, மாணவ மன்றத் தலைவராக உம்மைக் கருதிக்கொண்டு அழைப்புக் கடிதமொன்றை **70 - 75** சொற்களில் எழுதுக.

**அல்லது**

உமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டி பற்றி **70 - 75** சொற்களில் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக. *(10 புள்ளிகள்)*

**6.** பின்வரும் சிங்கள வாக்கியங்களை **அல்லது** ஆங்கில வாக்கியங்களைத் **தமிழில்** மொழிபெயர்க்க.
පහත දැක්වෙන සිංහල වාක්‍ය **හෝ** ඉංග්‍රීසි වාක්‍ය හෝ දෙමළ භාෂාවට පරිවර්තනය කරන්න.
Translate the following Sinhala sentences **or** English sentences into **Tamil**.

(i) ඔබ පාසලට පැමිණියේ කෙසේ ද?
(ii) ඇය වාසය කරන්නේ නුවර, නිමල් පාරේ, අංක 6 හි ය.
(iii) මම ඔබට කෑමට වී වගා කරමි.
(iv) තණකොළ මත ගමන් නොකරන්න.
(v) ඔවුහු වේගයෙන් දුවමින් සිටිති.

(i) How did you come to school?
(ii) She lives at No. 6, Nimal Road, Kandy
(iii) I grow rice for you to eat.
(iv) Don't walk on the grass.
(v) They are running very fast. *(10 புள்ளிகள்)*

* * *